**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை:-திருமதி.எம்.சந்தோஷம்., பி.எஸ்சி.,பி.எல்**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

**2025 ம் ஆண்டு, ஜீலை 17 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.24/2021**

**(CNR.NO:TNCB170000242021)**

1. R.சிவசாமி, த/பெ.ராமசாமி, வயது சுமார் 61, க.ச.எண்.23, 5 வது காந்தி வீதி, நேரு நகர், கிழக்கு சிவில் ஏரோட்ரோம் அஞ்சல், கோயமுத்தூர் - 641014.

.....வாதி

/-எதிர்-/

1. A.வசந்தாமணி, த/பெ.V.K.ஆறுமுகம், வயது 62, 1/48 தோட்டச்சாலை, வளையந்தோட்டம், வளையபாளையம், மோப்பிரிபாளைம், பஞ்சாயத்து, காடுவெட்டிபாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி (Via) சூலூர் தாலூக்கா, கோயம்புத்தூர் 641402.

2. V.A.சதாசிவம், த/பெ.V.K.ஆறுமுகம், வயது 45, 1/48 தோட்டச்சாலை, வளையந்தோட்டம், வளையபாளையம், மோப்பிரிபாளைம், பஞ்சாயத்து, காடுவெட்டிபாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி (Via) சூலூர் தாலூக்கா, கோயம்புத்தூர் 641402.

3. A.மோகன் குமார், த/பெ.V.K.ஆறுமுகம், வயது 44, 1/48 தோட்டச்சாலை, வளையந்தோட்டம், வளையபாளையம், மோப்பிரிபாளைம், பஞ்சாயத்து, காடுவெட்டிபாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி (Via) சூலூர் தாலூக்கா, கோயம்புத்தூர் 641402.

4. K.கவிதா, க/பெ.கிருஷ்ணகுமார், வயது 41, 16/5, அய்யர் லேயவுட், 3 வது வீதி சிங்காநல்லூர், கோயம்புத்தூர் 641005.

.....பிரதிவாதிகள்

பிரதிவாதிகளின் தந்தையின் சகோதரர் பழனிச்சாமி பெயரில் 07.04.1969 ம் தேதியில் அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கிரய ஆவண எண்.499/1969 தாவா சொத்தினை பொறுத்து செல்லாது என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகளுக்கு இடையே கடந்த 26.04.2016 தேதியில் எழுதப்பட்டு அது அன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாகசாசன எண்.2867/2016 தாவா சொத்தினை பொறுத்து செல்லாது என்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்திற்கு பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, உறவினர்களோ, வேலையாட்களோ, முகவர்களோ தாவா சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீனத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத்தொகையை வழங்கிடுமாறும் வாதி பிராத்திக்கிறார்.

வழக்கு பதிவு செய்த நாள் - 11.02.2021

வழக்கு மூலமானது 09.06.1956, 10.05.2014, 06.08.2020, 07.04.1969, 26.04.2016, 20.11.2020 இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

இந்த வழக்கிற்காக மதிப்பு 11000/- நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.330 நீதிமன்ற கட்டணமாக நீதிமன்ற கட்டணச் சட்டப்பிரிவு 25(d) மற்றும் 27(c) ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது.

**விவரங்கள்**

| | |
|---|---|
| 1. விளம்புகை பரிகாரத்திற்கான மதிப்பு | ரூ.5000/- |
| பிரிவு 25(d) ன் கீழ் நீதிமன்ற கட்டணம் | ரூ.150/- |
| விளம்புகை பரிகாரத்திற்கான மதிப்பு | ரூ.5000/- |
| பிரிவு 25(d) ன் கீழ் நீதிமன்ற கட்டணம் | ரூ.150/- |
| 2. செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கான மதிப்பு | ரூ.1000/- |
| பிரிவு 27(c) ன் கீழ் நீதிமன்ற கட்டணம் | ரூ.30/- |

| | |
|---|---|
| மொத்த தாவா மதிப்பீடு | ரூ.11000/- |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ.330/- |

இந்த வழக்கானது இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.D.சம்பத்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**1. வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

**2. செலவுத்தொகை இல்லை.**

**<u>சொத்துவிவரம்</u>**

கோயமுத்தூர் ரிடி, அன்னூர் சப்.டி., முன்பு பல்லடம் தாலூக்கா, தற்போது சூலூர் தாலூக்கா, மோப்பிரிபாளையம் கிராமத்தில் சர்க்கார் சர்வே புஞ்சை 467/B1 நெ.காலை 9.48 க்கு 12.99 இதில் பொதுவில் ஏ.0.93 1/2 மட்டும் கிரயம் செய்து கொடுத்திருக்கிறோம். 477/B நெ.காலையில் வடகோட்டில் கிழமேலாகப் போகும் மாமூல் வண்டி தடத்தில் நீயும் வண்டி வகையரா ஓட்டிக் கொண்டு நடந்து கொள்ளவும் ஷை சொத்து சூலூர் யூனியனை சார்ந்த மோப்பிரிபாளையம் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் சேர்ந்தது. மேற்படி சொத்து தற்போதைய சப்டிவிசன்படி 467/B1I-ல் உள்ளது.

2025 ம் ஆண்டு ஜீலை 17 ம் நாள் வியாழக்கிழமை தேதியிட்ட என் கைப்பட நீதிமன்ற முத்திரையுடன் இந்நீதிமன்றத்தால் வழங்கப்படுகிறது.

Sd./M.சந்தோஷம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்

Decree

OS.No.24/2021

Dated:17.07.2025.

DMC Sulur